8. அறிவிப்பு.

பேரவை அலுவல்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதற்கிணங்க இந்தக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாற்றம் செய்யப்பட்டுள்ளது :—

14-4-1992-ஆம் நாள் அம்பேத்கார் நூற்றாண்டு விழாவை ஒட்டி அரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளதால் அன்று, விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதாக இருந்த கோரிக்கை எண். 21 மீனவளம், கோரிக்கை எண். 27 கதர் கிராமத் தொழில்கள், கோரிக்கை எண். 49 ஊரகத் தொழில்கள், கோரிக்கை எண். 60 ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு ஆகிய கோரிக்கைகள் அதாவது மீனவளத் துறை அமைச்சர் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளும், ஊரகத் தொழில் துறை அமைச்சர் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளும் 20-4-1992 திங்கட்கிழமை மாலை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் நாளை 9-4-1992 காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.19 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

57. தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான பதினேழாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1-1956) 619 ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

58. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் 1990-91 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள். [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6-1974) 39(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).